1973 ஆகஸ்ட் 14]

மண்வாரி இயந்திரத் தொழிற்சாலை

*136 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-திருவள்ளூரில் மண்வாரி இயந்திரத் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கான அனுமதி ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்.

திரு. ஆ. பரந்தாமன்: இந்துஸ்தான் மோட்டார் என்று சொல்லப்படுகிற எர்த் மூவர்ஸ் கம்பெனி என்னுடைய தொகுதியில் இருக்கிறது; அந்தக் கம்பெனி துவக்கப்படுகிற நேரத்தில் அந்த வட்டார மக்கள் பெரும் அளவுக்கு பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை அளித்தார்கள். ஆனால் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு தந்து இங்கே எடுத்துக்கொள்வதில்லை என்று கருதுகிறார்கள். ஆகவே, அந்த அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அந்த வட்டாரத்து மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிலத்தைக் கொடுத்தவர்களுடைய குடும்பத்தினர் இந்தத் தொழிற்சாலையில் பணிபுரிவதற்கு ஏற்ற தகுதி படைத்தவர்களாக இருப்பார்களேயானால், அவர்களுடைய பெயர்களை அரசுக்கு அனுப்பலாம். நிச்சயம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும்படி அரசு கேட்டுக்கொள்ளும்.

திரு. கா. வேழவேந்தன்: இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is the biggest Earth Movers Factory in Kolar Gold Fields area in the Mysore State which is very near the Dharmapuri district and the conditions for starting such a factory exist in that district also. Considering all the favourable conditions there, may I know from the Hon. Minister whether he will consider a proposal to establish a Earth Movers Factory in the Dharmapuri district?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருவள்ளூரில் ஏற்கெனவே தொடங்கி விட்டோம். ஆகவே இனிமேல் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை.